iv. நீர்,தேங்காய் எண்ணெய் என்பவற்றின் அடர்த்திகள் முறையே 1000 $kg\ m^{-3}$, 900 $kg\ m^{-3}$,நீரின் திணிவு 200g. நீரின் தன்வெப்பக்கொள்ளளவு 4200 $J\ kg\ K^{-1}$. 62^oC இலிருந்து $56\ ^oC$ இற்குக்குளிர நீர்,தேங்காய் எண்ணெய் என்பன முறையே 4 நிமிடம், 1.8 நிமிடம் எடுத்தன எனில், தேங்காய் எண்ணெயின் தன்வெப்பக்கொள்ளளவு யாது?

……

……

……

……

AUSDAV

04.மின் பிறப்பிக்கக்கூடிய திருக்கை மீன் வகைகளில் ஒன்றை அருகிலுள்ள படம் காட்டுகின்றது. இவ் வகை மீன்கள் இரைகளை, தாக்குதல் நடாத்துவதன் மூலம் கைப்பற்றிக் கொள்வதற்கும், எதிரிகளிடமிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்வதற்கும் மின்னைப் பிறப்பிக்கக்கூடியனவாக சிறப்படைந்துள்ளன.



இவற்றில் காணப்படும் **"Electric Organs"** எனப்படும் விசேட உடல் பகுதியில் பல மின் கலங்களை ஒத்த அமைப்புக்கள் காணப்படும். இவை தேவைக்கேற்ப தொடராகவோ அல்லது சமாந்தரமாகவோ ஒழுங்குபடுத்தப்படக் கூடிய வகையில் அமையப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும்.

a.திருக்கை மீனில் காணப்படும் மின் கலங்களை, ஒத்த அமைப்புக்களின் ஒழுங்குபடுத்தல் பற்றி விளங்கிக்கொள்வதற்காக 5 மின்கலங்களை சமாந்தரமாகவும், தொடராகவும் இணைத்து உருவாக்கப்பட்ட இரு சுற்றுக்களைப் படம் காட்டுகிறது. ஒவ்வொரு சுற்றுக்கும் குறுக்கே சுமைத்தடை R இணைக்கப்பட்டதுடன் அவற்றினூடான மின்னோட்டம், முனைவு அழுத்தவேறுபாடுகள் அளவிடப்பட்டு கீழே காட்டப்பட்டவாறு அட்டவணைப்படுத்தப்பட்டன. இங்கு A,V மானிகள் இலட்சியமானவை.



சுமைத்தடை (Ω)	தொடர் ஒழுங்கில் மின்னோட்டம் (A)	சுமாந்தர ஒழுங்கில் மின்னோட்டம் (A)
0.1	2.7	7.2
1	2.0	1.3
10	0.55	0.14

i.நன்னீரானது கடல் நீரை விட உயர் தடைத்திறனைக் கொண்டது. ஆயின் இவ்வகை மீன் நன்னீர், கடல்நீரில் வாழும் போது அவற்றின் கலங்களின் ஒழுங்கமைப்பு (தொடர்/சமாந்தரம்) பற்றி யாது கூறுவீர். (உயர்வான மின்னோட்டத்தைப் பிறப்பித்தலே மீனின் சிறப்பான சூழலுக்கேற்ற இசைவாக்கமாக இருக்கும்)

நன்னீரில் : ……………………………………………………………………………………………

கடல் நீரில் : ……………………………………………………………………………………………

ii.உமது விடையை மேலே உள்ள அட்டவணையில் பெறப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் நியாயப்படுத்துக.

……………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………

iii.ஐந்து கலங்கள் தொடர் நிலையில் உள்ள போது மொத்த மின்னியக்க விசை 6.9V ஆக இருப்பின், கீழே தரப்பட்ட அட்டவணையில் உள்ள தரவுகளைப் பயன்படுத்தி கலம் ஒன்றில் அகத்தடையைக் காண்க.

சுமைத்தடை(Ω)	முனைவு அழுத்தம் (A)	மின்னோட்டம் (A)
2.2	3.3	1.5

……………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………

AUSDAV

b. கடல் நீரின் தடைத்திறனைத் துணிவதற்கான பரிசோதனை ஒன்றிற்காக, பிளாஸ்திக் கொள்கலன் ஒன்று கடல் நீரால் முற்றாக நிரப்பப்பட்டது. உலோகத் துண்டுகள் இரண்டு கொள்கலனின் முனைவுகள் X,Y என்பவற்றை மூடியிருக்குமாறு கலனின் உள்ளே வைக்கப்பட்டுள்ளது.



உலோகத் தகட்டுத் துண்டுகளுக்கு தடைமானி ஒன்று இணைக்கப்பட்டு X,Y இற்கு இடையிலான கடல் நீரின் தடை அளக்கப்பட்டது. (கடல் நீரின் தடை $= 1.2k\Omega$)

i. கடல் நீரின் தடைத்திறனைக் கணிக்க.

……
……
……

ii. மாணவன் ஒருவனால் குறித்த பரிசோதனையில் கடல் நீரிற்குப் பதிலாக நன்னீர் எடுக்கப்பட்டு, அதனுள் உப்பு சிறிது சிறிதாக சேர்த்து கலக்கப்படுகிறது. இதன் போது சேர்க்கப்படும் உப்பின் திணிவு m உடன் தடைமானியின் வாசிப்பு R இற்கான வரைபு ஒன்றை வரைகிறான். மாணவனால் வரையப்பட்டிருக்கக்கூடிய வரைபின் பருமட்டான வரைபை வரைந்து காட்டுக.(அச்சுக்களைத் தெளிவாகக் குறிப்பிடுக.)

c.

i. ஒரு திருக்கை மீனானது, தனது இரையைத் தாக்கும் போது, ஒரு அடியில் 45V அழுத்தவேறுபாட்டையும்,0.12A மின்னோட்டத்தையும், 5ms இல் உற்பத்தி செய்கின்றது. குறித்த ஒரு தாக்குதலிற்கான அடிப்புக்கள் 400 ஆயின், இத் தாக்குதலில் இம்மீனினால் இடமாற்றப்பட்ட சக்தியைக் காணிக்க.

……
……
……

ii. இவ்வகைத் தாக்குதலின் போது திருக்கை மீனின் உடற்பகுதிகள் பாதிப்படையாமல் இருப்பதற்கு அதன் உடற்பாகத்தின் தடைத்திறன் எவ்வாறு இருத்தல் வேண்டும். காரணம் தருக.

……
……
……

iii. திருக்கை மீனினால் நிகழ்த்தப்படும் இவ்வகைத் தாக்குதலால்,இரை மீது ஏற்படும் பாதிப்பு குறித்த ஒரு தூர எல்லைக்கு உட்பட்டதாக இருப்பதற்கான காரணம் யாது?

……
……
……
……

AUSDAV

முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved)

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் அபிவிருத்திச் சங்கம் வவுனியா மாவட்டம்
All University Students' Development Association Vavuniya District

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2024 புரட்டாதி
General Certificate of Education (Adv. Level) Examination, 2024 Septemper

பௌதிகவியல் II Physics II	பகுதி B – கட்டுரை	01	T	II

நான்கு வினாக்களுக்கு **மட்டும்** விடையளிக்க.
($g=10ms^{-2}$)



5. உயிர்க்காப்பு படகு நிலையம் ஒன்றில் இருந்து படகு ஒன்று படத்தில் காட்டியுள்ள சரிவான பாதையில் ஓய்விலிருந்து ஆர்முடுகிச்செல்கிறது.இச்சரிவான பாதை கிடையுடன் θ கோணம் சாய்ந்துள்ளது.இங்கு $\sin\theta \approx 0.20$ ஆகும். அப்படகு தனது பிரயாணத்தின் முதல் பகுதியை உருக்கு உருளைகளின் மீது ஆர்முடுகிச் சென்று, பின்னர் கிறீஸ் பூசப்பட்ட இரும்பு தகட்டின் மீது மெதுவாக வழுக்கிச்செல்கிறது.படகின் திணிவு $4.8x10^4$ kg ஆகும். உருக்கு உருளைகள் மீதான முழு இயக்கத்தின் போது உராய்வு இல்லை எனவும், படகு சிறிய செவ்வக வடிவத்தை உடையது எனவும் கருதுக.

(a) (i) படகு உருளை வழியே இயங்கும் போது,
(ii) படகு கிறீஸ் பூசப்பட்ட தகடு வழியே இயங்கும் போது,
அதில் தாக்கும் புறவிசைகளை குறித்துப் பெயரிடுக. அத்துடன் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் ஏற்படும் சக்தி மாற்றங்களின் தன்மையைக் குறிப்பிடுக?

(b) இரும்புத்தகட்டினால் அசையும் படகுக்குக் கொடுக்கும் உராய்வு விசை மாறிலி எனக்கொண்டு, இவ்வாறான நிலையில் $8ms^{-1}$ வேகத்துடன் இயங்கிக்கொண்டிருக்கும் படகு ஓய்விற்குக் கொண்டுவரப் படுகிறது. இச்சந்தர்ப்பத்தில் தகட்டின் மீது அசைந்த தூரம் 40m எனின், பின்வருவனவற்றைத்துணிக.

(i)உருளைகளின் மீதான இயக்கத்தில் படகின் ஆர்முடுகலின் பருமன்?
(ii)இரும்புத்தகட்டிற்குக் கிறீஸ் பூசப்பட்டதன் அனுகூலம் யாது?
(iii)பின்னர் இரும்புத்தகட்டின் மீதான இயக்கத்தில் படகின் ஆர்முடுகலின் பருமன் யாது?
(iv)இரும்புத்தகட்டின் மீதான இயக்கத்தில் படகு மீது தாக்கும் விளையுள் விசையின் பருமன் யாது?
(v)இரும்புத்தகடு பிரயோகிக்கும் உராய்வு விசையும்,அதன் திசையும்?

(c) ஓர் அலைவு நிலையின் போது படகானது,ஓய்விலிருந்து முதலில் உருளையின் மீது 30m இயங்கி, பின்னர் இரும்புத்தகட்டின் மீது நுழைந்து அதன் மீது 45m அசைந்து, அதன் பின்னர் நீரினுள் புகுகின்றது.அத்துடன் வினா (b)(ii) இல் பெற்ற அதே அமர்முடுகலைப்பயன்படுத்தித் தகட்டின் மீதான இயக்கத்திற்குப் பின்வருவனவற்றைக் காண்க.

(i)படகு முதல் 30m தூரம் அசைந்த பின்னர் பெறும் கதி?
(ii)அப்படகு தகட்டின் மீது இயங்கி,நீரினுள் புகும் போது கொண்டிருக்கும் கதி?
(iii)நீரினை அடையும் வரை படகின் இயக்கத்திற்கான வேக-நேர வரைபை பெறுமானங்களுடன் வரைக?

(d) சுழலியை சுழற்றி அதிலுள்ள கம்பியை சுற்றுவதன் மூலம் அப்படகு பின்னோக்கி 75m தூரம் மாறாக்கதி $1ms^{-1}$ உடன் இழுக்கப்படுகின்றது. பகுதி (b) இல் உள்ள விடைகளைப் பொருத்தமான இடத்தில் பிரயோகிக்க.

(i)படகு இரும்புத்தகட்டிலும்,உருளையிலும் உள்ள போது கம்பியிலுள்ள இழுவையைக் காண்க.

(ii)ஒவ்வொரு பகுதியிலும் உயர்த்துவதற்குத் தேவையான வலுவைக்காண்க.

(iii)கம்பி உருளை மீது சுற்றப்படுவதனால் உருளையின் பலிதவிட்டம் 0.7m இலிருந்து 1.20m இற்கு அதிகரிக்கின்றது.படகு உருளையை வந்தடையும் போது விட்டம் 1.00m எனக்கொண்டு,உயர்த்துதலின் போது சுழலி உருளையின் மீதான உயர் முறுக்கத்தைக்காண்க.

(iv)இத்தொகுதியின் திறன் 0.30 எனின்,இந்நிபந்தனையின் கீழ் சுழலியை இயக்குவதற்குத் தேவையான எஞ்சினது இழிவுப்பயப்பு வலுவைக்காண்க.

6. (a) (i) டொப்ளரின் விளைவு என்றால் என்ன?

(ii) டொப்ளரின் விளைவு பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் இரண்டு தருக?

(b)

(i) ஒரு ஒலிமுதல் S ஆனது, மாறா வேகத்தில் மாறா மீடிறனுடைய ஒலியைப்பிறப்பித்து கொண்டு உரு-I இல் காட்டப்பட்டவாறு A,B எனும் இரு நிலையான அவதானிகளுக்கிடையில் நகருகிறது.



உரு-I

(1)உரு-I இனை உமது விடைத்தாளில் பிரதி செய்து, ஒலிமுதல் S ஆல் பிறப்பிக்கப்படும் மூன்று அலைமுகங்களை வரைக.

(2)நீர் (1) இல் வரைந்த அலைமுகத்தைக் கொண்டு, அவதானிகள் A,B என்போர் கேட்கும் ஒலி அலைகளின் மீடிறன்களைப் பற்றி விளக்குக.

(ii) வீதிப்போக்குவரத்து பொலிசார் பாவிக்கும் வாகனங்களின் கதியை அறியப்பயன்படுத்தப்படும் ராடர் (Radar) கருவிகளில் டொப்ளரின் விளைவு பயன்படுத்தப்படுகிறது. இவ் ராடர்களில் ஒலியலைகளுக்குப் பதிலாக நுண்ணலைகள் பயன்படுத்தப்படுகின்றது. என்னும் ஒலியலைகளிற்கு டொப்ளரின் சமன்பாட்டைப் பாவிப்பது போல் நுண்ணலைகளிற்கும் பாவிக்கலாம். ராடரிலிருந்து அனுப்பப்படும் அலைகளிற்கும் (Transmitted Radar Wave), தெறித்து வரும் அலைகளிற்கும் (reflected waves) இடையிலான அடிப்பு மீடிறனைக் கொண்டு, வீதிகளில் செல்லும் வாகனங்களின் கதியை ராடர் துணிந்து கொள்கிறது.



உரு II

நிலையாக நிற்கும் ஒரு பொலிஸ் காரிலிருந்து அனுப்பப்படும் f மீடிறனுடைய நுண்ணலையையும், பொலிஸ் காரை நோக்கி **v** வேகத்துடன் வரும், காரில் பட்டு தெறிப்படைந்து வரும் நுண்ணலையையும் மேலே உரு II காட்டுகிறது. இவ்விரு அலைகளினதும் மேற்பொருந்துகையால் உருவாகும் விளையுள் அலை உரு III இல் காட்டப்பட்டுள்ளது. (நுண்ணலையின் கதி **c** என்க.)

AUSDAV



உரு III

(1)காரில் அவதானிக்கின்றவாறு மீடிறன் f' இற்கான ஒரு கோவையை **v,c,f** என்பவற்றில் எழுதுக.

(2)ராடரில் அவதானிக்கின்றவாறு மீடிறன் f'' இற்கான ஒரு கோவையை **v,c,f** ன்பவற்றில் காண்க.

(3)அடிப்பு மீடிறனுக்குரிய கோவையை **2fv/c** எனக்காட்டுக.(நுண்ணலையின் கதியுடன் ஒப்பிடும் போது காரின் கதி புறக்கணிக்கத்தக்கது எனக்கொள்க.)

(4)அடிப்பு மீடிறன் யாது?

(5) f=10GHz, c= $3\text{x}10^8$ ms^{-1} எனின், காரின் கதி யாது?

(b) 10m ஆரையுடைய கிடைவட்டப்பாதையில் C இலிருந்து $5ms^{-1}$ கதியில் மணிக்கூட்டுத்திசையில் இக்கார் பயணம் செய்கிறது. விட்டம் CD வழியே நீட்டப்பட்ட கோடு வழியே உள்ள ஒரு புள்ளி S இல் நிற்கும் பொலிஸ்காரன் மாறா அதிர்வெண் 1000Hz ஐ உடைய சீழ்க்கையை ஒலிக்கின்றான். வளியில் ஒலியின் கதி $340ms^{-1}$ எனவும் $\pi = 3$ எனவும் கொள்க.



(i) கார் எப்புள்ளியிலிருக்கும் போது உயர் செறிவையுடைய ஒலியை காரிலுள்ள சாரதி கேட்க முடியும்? இதற்கான காரணம் யாது?

(ii) எப்புள்ளியிலிருக்கும் போது காரிலுள்ள சாரதியால் உண்மை அதிர்வெண்ணைக் கேட்க முடியும்?

(iii) மேலுள்ள உருவை உமது விடைத்தாளில் பிரதி செய்து, சாரதி கேட்கும் உயர் தோற்ற அதிர்வெண் உடைய புள்ளியையும், இழிவு தோற்ற அதிர்வெண் உடைய புள்ளியையும் முறையே P,Q எனக் குறித்துக் காட்டுக .

(iv) முழுவட்டப்பாதையையும் பையனுக்கு ஓடி முடிப்பதற்கு எடுக்கும் காலம் யாது?

(v) இழிவு தோற்ற அதிர்வெண் உடைய ஒலியைக் கேட்டு, பின்னர் உயர் தோற்ற அதிர்வெண் உடைய ஒலியைக்கேட்பதற்கு 10s காலம் எடுப்பின், வட்ட மையம் o உடன் புள்ளிகள் P,Q அமைக்கும் கோணம் யாது?

(vi) புள்ளி o இலிருந்து ஒலியை எழுப்பும் பொலிஸ்காரனுக்கு இடைப்பட்ட தூரம்?

(vii) சாரதியால் கேட்கும் உயர் தோற்ற அதிர்வெண்ணும்,இழிவு தோற்ற அதிர்வெண்ணும் யாது?

(viii) சாரதி புள்ளி F இல் இருக்கும் போது அவனுக்குக் கேட்கும் தோற்ற அதிர்வெண் என்ன?

(ix) முழுமையான வட்டப்பாதை வழியே சாரதி பயணிக்கும்போது சாரதிக்குக் கேட்கும் தோற்ற அதிர்வெண்ணில் ஏற்படும் மாற்றத்தைக்காட்ட அதிர்வெண் எதிர் தூர வரைபை வரைக.

(x) சீழ்க்கையின் வலு 16w ஆயின், o இலுள்ள ஒரு மனிதனால் உணரப்படும் ஒலியின் ஒலிச்செறிவுமட்டம் யாது? (கேழ்தகைமை நுழைவாய் = $10^{-12}Wm^{-2}$)

AUSDAV

7. (a) ஒரு நிலைக்குத்தான U குழாயில் அடர்த்தி ρ யை உடைய ஒரு திரவம் உள்ளது. இக்குழாயின் ஒரு முனை வளிமண்டலத்திற்குத் திறந்திருக்கும் அதேவேளை உரு (1) இல் காணப்படுகின்றவாறு குழாயின் மற்றைய முனையில் ஒரு சவர்க்காரப்படலம் ஆக்கப் பட்டுள்ளது. சவர்க்காரப்படலத்தின் வடிவத்தை மாற்றத்தக்கதாகச் சவர்க்காரப்படலத்தைக் கொண்ட புயத்திலுள்ள அமுக்கத்தை மாற்றலாம்.



உரு (1)

(i) படலத்தின் ஆரை (r) இனதும் U குழாயின் புயங்களின் திரவ மட்டங்களுக்கிடையே உள்ள உயர வித்தியாசம் (h) இனதும் பெருக்கம் மாறிலியெனக் காட்டுக.

(ii) மேலே (i) இல் குறிப்பிட்ட மாறிலியின் பெறுமானம் $1.23 x 10^{-5} m^2$ எனின், சவர்க்காரக் கரைசலின் பரப்பிழுவையைத் துணிக. (U குழாயிலுள்ள திரவத்தின் அடர்த்தி 800 $kg\ m^{-3}$ எனக் கொள்க.)

(b) இப்போது சவர்க்காரப்படலம் அகற்றப்பட்டு, புயத்தின் ஒத்த முனை அடைக்கப்படுகின்றது. உரு (2) இல் காணப்படுகின்றவாறு அகவிட்டம் 0.7mm ஆகவுள்ளதும், நீரில் அமிழ்த்தப்பட்டதுமான ஒரு நிலைக்குத்தான மயிர்த்துளைக்குழாயுடன் U குழாயின் அப்புயம் இணைக்கப்படுகின்றது. இப்போது U குழாய் மெலிமானியாகச் செயற்படுகின்றது. மயிர்த்துளைக் குழாயின் திறந்த முனையினூடாக வளி மெதுவாக அனுப்பப்படும் போது மெலிமானியின் திரவ மட்டங்களிடையே உள்ள வித்தியாசம் தொடக்கத்தில் 9.1cm இற்கு அதிகரித்துப்பின்னர் 4.0cm இற்குக்குறைந்து மறுபடியும் 9.1cm இற்கு அதிகரித்தது.(நீரின் அடர்த்தி 1000 $kg\ m^{-3}$)



உரு (2)

(i) மெலிமானியின் திரவ மட்டங்களுக்கிடையே உள்ள வித்தியாசம் மேலே விவரித்தவாறு மாறுவது ஏன் என்பதை விளக்குக.
(ii) நீர் மட்டத்திலிருந்து மயிர்த்துளைக்குழாயின் அடி முனையின் ஆழம் (h_1) ஐக் காண்க.
(iii) இதிலிருந்து நீரின் பரப்பிழுவையைத் துணிக.

(c) 30^0c வெப்பநிலையிலுள்ள r ஆரையுடைய n எண்ணிக்கையான இரசத்துளிகள் ஒன்றாகித்தனித்துளி ஆகின்றது. இரசத்தின் மேற்பரப்பிழுவை T ஆகும்.

(i) ஆரம்பத்திலுள்ள இரசத்துளி ஒன்றின் மேற்பரப்புச் சக்திக்கான கோவையை r,T சார்பில் தருக.
(ii) ஒன்றாகிய பின் உருவாகிய இரசத்துளியின் ஆரையை r,n சார்பில் பெறுக.
(iii) இரசத்துளிகள் ஒன்றாகும் போது வெளிவிடப்படும் சக்திக்கான கோவையை T,r,n சார்பில் பெறுக.
(iv) இரசத்துளிகள் ஒன்றாகும் போது வெளிவிடப்படும் சக்தி யாவும் இரசத்தினால் உறிஞ்சப்படும் எனின், தனித்துளியின் வெப்பநிலையைக் காண்க. $T=476mNm^{-1}$, r=0.2mm, n=64, இரசத்தின் அடர்த்தி, தன்வெப்பக்கொள்ளளவுகள் முறையே $13600kgm^{-3}$,$144Jkg^{-1}K^{-1}$ ஆகும். (வெப்பநிலையுடன் இரசத்தின் மேற்பரப்பிழுவிசையின் மாறலைப் புறக்கணிக்க.)

08. (a) (i)நிலை மின்புலத்தில் காணப்படும் ஒரு புள்ளியிலுள்ள அழுத்தத்தை வரைவிலக்கணப்படுத்துக.
(ii)சம அழுத்த மேற்பரப்பின் பண்புகளை எழுதுக.
(iii)A பரப்பளவுடைய தட்டொன்றுக்கு q ஏற்றம் வழங்கப்பட்டால் தட்டுக்கு அருகிலுள்ள புள்ளியில் மின்புலச்செறிவு $E=\frac{q}{A\varepsilon_\circ}$ இனால் தரப்படுமெனக்காட்டுக.(இங்கு $\varepsilon_\circ$ ஆனது தட்டு வைக்கப்பட்டுள்ள ஊடகத்தின் மின் அனுமதி திறன்)

(b)(i)r ஆரையுடைய ஒரு கடத்தும் கோளமொன்று புவி மேற்பரப்பிற்கு மேல் வைக்கப்பட்டுள்ளது.புவிக்கும் கோளத்துக்கும் இடையிலான மின்விசைக்கோடுகளை வரைக.சம அழுத்த மேற்பரப்பையும் குற்றுப் புள்ளிக் கோட்டினால் வரைந்து காட்டுக.

(ii)நிலைமின் புலத்திலுள்ள ஒரு பொருள் மின்னேற்றப்பட்டுள்ளதா என்பதைத் தீர்மானிக்கப்பொன்னிலைமின்காட்டிகள் பயன்படுத்தப்படுகின்றன.அப்பொருள் மின்னேற்றப்பட்டிருந்தால் அது எவ்வகையான ஏற்றம் என்பதை தீர்மானிக்கவும்,நிலைமின்புலத்திலுள்ள ஒரு புள்ளியிலுள்ள அழுத்தத்தை அளவீடு செய்யவும் இது பயன்படுத்தப்படுகின்றது. உரு (1) இல் காட்டியவாறு இரண்டு சமாந்தரத்தட்டுக்கள் d இடைத்தூரத்தில் வைக்கப்பட்டு தட்டுஒன்றிற்கு +q ஏற்றம் வழங்கப்படுவதுடன் மற்றயது புவிக்குத்தொடுக்கப்படுகிறது.இதன் காரணமாகதட்டுகளுக்கிடையே நிலைமின் புலமொன்று உருவாகிறது. புள்ளி A இல் அழுத்தம் V, அப்புள்ளியில் பொன்னிலை மின்காட்டியை வைத்தபோது திரும்பல் θ_1 ஆகும். A இற்கும் B இற்கும் இடையேயான தூரம் a ஆக இருக்கும் போது புள்ளி B இல் பொன்னிலை மின்காட்டியை வைத்த போது திரும்பல θ_2. புள்ளி B இலுள்ள அழுத்தத்தைக் காண்பதுடன் A இற்கும் B இற்கும் இடையிலுள்ள மின்புலச் செறிவையும் காண்க.



உரு (1)

(iii)கொள்ளளவி ஒன்றின் கொள்ளளவத்தை வரையறுக்குக.

(c)0.10m ஆரையுடைய கடத்தும் கோளொன்று $+0.060\mu C$ ஏற்றமொன்றைக் காவுகின்றது.கீழுள்ள உருக் கோளத்தை சூழவுள்ள மின்புலத்தைக் காட்டுகிறது.



(i)கோளத்தின் மேற்பரப்பில் மின்புலச்செறிவின் பருமனைக் கணிக்க.

(ii)A கோளத்தின் மையத்திலிருந்து 0.040m தூரத்திலும்,B கோளத்தின் மையத்திலிருந்து 0.50m தூரத்திலும் உள்ளன. A,B இற்கிடையேயான அழுத்த வித்தியாசம் B,C இற்கிடையேயான அழுத்த வித்தியாசத்திற்கு சமனாகும்.கோளத்தின் மையத்திலிருந்து C இன் தூரத்தைக்கணிக்க.
$(e=1.6x10^{-19}C, Me=1.69x10^{-3}kg)$

09. பகுதி (A) இற்கு அல்லது பகுதி (B) இற்கு மாத்திரம் விடை எழுதுக.
பகுதி (A)

(a) மின்னியக்கவிசை,அழுத்த வேறுபாடு ஆகிய இரண்டினதும் அலகு வோல்ற்று ஆகும்.
(i)வோல்ற்றினை வரையறுக்க?
(ii)மின்னியக்கவிசை,அழுத்த வேறுபாட்டினை வரையறுக்க?

(b) கட்டடங்கள்,பாலங்கள், வானூர்தி என்பவற்றின் கட்டமைப்புக்களில் ஏற்படும் விகாரங்களை அளவிடுவதற்காக விகாரக்கணிச்சி (Strain gauge) என்னும் கருவியானது பயன்படுத்தப்படும். இதன் ஒரு வகை உருவில் காட்டப்பட்டுள்ளது. பிளாஸ்ரிக் துண்டுடன் மிக மெல்லிய சீரான தடைக்கம்பியானது வலிமையாகப் பிணைக்கப்பட்டு கணிச்சி உருவாக்கப்படும். இது சோதனை மாதிரியுடன் (Component under test) வன்மையாக இணைக்கப்படுவதால் சோதனை மாதிரியில் ஏற்படுத்தப்படும் வடிவமாற்றத்தினை இக்கம்பிகளின் அடுக்கும் பெறத்தக்கதாயிருக்கும். இக்கம்பியின் முனைகளை உவீத்தன் பாலச்சுற்றுக்கு இணைப்பதன் மூலம் விகாரப் பெறுமானத்தை அறிய இயலும்.



உரு 1

AUSDAW

(i) விகாரக்கணிச்சியிலுள்ள கம்பிகள் இவ்வாறு சமாந்தர அடுக்குகளாக இணைக்கப்படுவதன் பிரதான அனுகூலம் யாது?

(ii) உருவில் காட்டப்பட்ட விகாரக்கணிச்சியிலுள்ள கம்பியின் மொத்த நீளம் யாது?

(iii) இக்கம்பி ஆக்கப்பட்ட திரவியத்தின் தடைதிறன் $5.0x10^{-7}\Omega m$ விட்டம் 0.040mm ஆகும். கணிச்சியின் விகாரமடையாத நிலையிலுள்ள தடை R இன் பெறுமானம் யாது? ($\frac{75}{\pi}$இன் பெறுமானத்தை 23.9 எனக்கொள்க.)

(iv) இக்கணிச்சியின் கம்பியானது 1.00mm இனால் நீட்டச்செய்யப்பட்ட நிலையில் இதன் தடையில் ஏற்படும் மாற்றம் r யாது? (கம்பியின் கனவளவு மாறாதிருப்பதாகக் கருதுக.)
சாடை: Δx சிறிதெனின் $(l+\Delta x)^2=l^2+2l\Delta x$ எனக்கொள்ளப்படலாம்.)

(c) தற்காலத்தில் இலங்கையின் மொத்த மின்வலு பிறப்பாக்கம் 14 x 10^3 GW(1 GW=10^9 W) இதில் 30% ஆனது இயற்கையாக உற்பத்தி செய்யப்படுகிறது. அதாவது நீர்வீழ்ச்சி, சூரியக்கலம். எஞ்சிய பகுதியானது கனிம எரிபொருட்களாலும் உண்டு பண்ணப்படுகிறது. எனினும் உற்பத்திவலுவை ஊடுகடத்தலில் 10% இழக்கப்படுகின்றது. இதனை இழிவளவாக்க நிலைமாற்றிகள் பயன்படும். உற்பத்தி செய்யப்படும் வலுவானது நிலைமாற்றிகளினால் 132kV மற்றும் 220kV உயர் அழுத்தத்திற்கு உயர்த்தப்பட்டு ஊடுகடத்தப்பட்டு உப மின்னஞ்சல் நிலையங்களில் 11Kv இற்கு குறைக்கப்படும். பின்னர் 230V அழுத்தத்தில் வழங்கப்படும்.

(i) நாளொன்றுக்கான இலங்கையின் மின்தேவையை காண்க.

(ii) மின்வலு உற்பத்தி நிலையத்தினால் உற்பத்தி செய்யப்படும் அழுத்தம் நேரத்துடன் மாறலை வரைபுபடுத்துக.

(iii) சக்தி இடமாற்றத்தின் போது நிலைமாற்றியுடன் இணைந்த கொள்கையை விபரிக்குக.

(iv) நிலைமாற்றியொன்று 11kV இருந்து 230V மின்னழுத்தத்திற்கு படிகுறைக்கப்பட்டது. இந்நிலைமாற்றியின் முதன்மைச்சுருள் 500 முறுக்குகளை கொண்டது எனின் துணையிலுள்ள முறுக்குகளின் எண்ணிக்கையை காண்க.

(v) நிலைமாற்றியின் முதன்மை துணை சுற்றுகளில் உள்ள மின்னோட்டங்கள் முறையே I_P யும் I_S யும் ஆகும். முறுக்குகளின் எண்ணிக்கை N_pயும், N_s யும் ஆயின் $\frac{I_p}{I_S}$ இற்கான கோவையை தருக.

(vi) மேலேயுள்ள கோவையை பெறுவதற்கு பயன்படுத்திய எடுகோள் யாது?

(vii) மேலே கூறப்பட்ட நிலைமாற்றியின் துணைச்சுருளானது செப்புக்கம்பியினால் முறுக்கப்படுவதற்கான காரணம் தருக.

பகுதி (B)

(a) இரவில் மின்தடை ஒன்று ஏற்படும் போது பற்றரியில் இயங்கும் விளக்கொன்றினைச் சுயமாக இயங்கவைக்கக்கூடியதான இலக்கச்சுற்று ஒன்றை வடிவமைக்க மாணவர் ஒருவர் விரும்புகிறார். மேலும், ஆளி ஒன்றை அழுத்துவதன் மூலம் எந்த நேரத்திலும் அது இயங்குவதற்கான ஒரு வசதியையும் சுற்றுக்கொண்டிருக்க வேண்டும். கீழ்வரும் தர்க்கப் பெறுமானங்களைக் (0,1) கொண்ட மூன்று பெயப்புக்கள் P,Q,R என்பவற்றை உருவாக்குவதற்கான வழிமுறைகளை மாணவர் கொண்டுள்ளார்.

P=0 ஆளி அழுத்தப்படாமல் இருக்கும் போது

P=1 ஆளி அழுத்தப்படும் போது

Q=0 பகல் நேரத்தில்

Q=1 இரவு நேரத்தில்

R=0 மின் தடை ஏற்படும் போது

R=1 மின் இருக்கும் போது

மாணவர் பயப்பு X ஆனது, X=1 ஆகும் போது விளக்கு எரியத்தக்கதாகவும் பயப்பு X ஆனது, X=0 ஆகும் போது விளக்கு அணையத்தக்கதாகவும் P,Q,R என்னும் மூன்று பெயப்புக்களைக் கொண்டு சுற்றை வடிவமைத்தால் பின்வருவனவற்றைக் காண்க.

(i)மெய்நிலை அட்டவணையைத் தருக.

(ii)மெய்நிலை அட்டவணையின் பயப்பு X இற்குரிய கோவையைத் தருக.

(iii)பூலச்சக்கர கணிதத்தைப் பயன்படுத்தி பயப்பு X ஆனது $x= P+Q.\bar{R}$ ஆகச்சுருக்கப்படலாம் எனக்காட்டுக.

AUSDAV

(iv)பயப்புX ஐ தரக்கூடிய தர்க்கச்சுற்றை வரைக.

(b)

(i)சேனர் இருவாயி ஒன்றுக்குரிய மின்னோட்டம் (I)- வோல்ற்றளவு (V) சிறப்பியல்பு வளையியைப் பரும்படியாக வரைந்து காட்டுக.சேனர் உடைவு வோல்ற்றளவை V_2 எனக்குறித்துக் காட்டுக.

(ii)10V உடைவு வோல்ற்றளவைக் கொண்ட சேனர் இருவாயியொன்று 100 Ω தடையைக் கொண்டதும் 10V என்னும் செப்பமான வோல்ற்றளவில் வேலை செய்வதுமான மின் உபகரணத்திற்குக் குறுக்கே இணைக்கப்பட்டிருப்பதைப் படம் காட்டுகின்றது. V ஆனது 12 V இலிருந்து 15V வரை வோல்ற்றளவை மாற்றக்கூடியதும் அகத்தடையற்றதுமான மாறும் நேரோட்ட மின்முதலாகும்.R என்பது ஒரு நிலையான தடையி ஆகும். சேனர்இருவாயியினூடான பின்முகக்கோடல் உயர்வு மின்னோட்டம் 65 m A ஆகும்.



1. V ஆனது 12 V ஆக உள்ள நிலையில் சேனர் இருவாயியினூடான மின்னோட்டம் 10 m A எனின், R இன் பெறுமானத்தைக் கணிக்க.
2. V ஆனது 15 V ஆக அதிகரிக்கும் சந்தர்ப்பத்தில் மின் உபகரணத்திற்கு 10 V என்னும் செப்பமான வோல்ற்றளவை வழங்கும் நோக்கத்துக்காக இந்த சேனர் இருவாயியைப் பயன்படுத்த முடியாது என்பதை உரிய கணிப்புக்களுடன் விளக்குக.
3. மேற்படி நோக்கத்துக்காக இந்த சேனர் இருவாயியைப் பயன்படுத்தும் போது முதலில் வோல்ற்றளவு V ஆனது எவ்வுயர் பெறுமதி வரை அதிகரிக்கப்படலாம்?

(c)

(i) மேலே காட்டப்பட்டுள்ள செயற்பாட்டுவிரியலாக்கி சுற்றுக்கள் (a), (b) இல் எது,
1.வோல்ற்றளவு ஒப்பானி (Voltage comparator)
2.நேர்மாற்று விரியலாக்கி (Inverting amplifier)
சுற்றாகப் பயன்படுகின்றது என விளக்கத்துடன் கூறுக.

10. பகுதி (A) இற்கு அல்லது பகுதி (B) இற்கு மாத்திரம் விடை எழுதுக.
பகுதி (A)

a) (i) பொருள் ஒன்றின் தன்வெப்பக்கொள்ளளவை வரையறுக்க.
(ii) வெப்பநிலையுடன் அடர்த்தியின் மாறலைக் காட்டும் சமன்பாட்டை எழுதுக.

b) மின்சக்தியை சேமிப்பதன் மூலம் சூரிய வலு முதல்களை பயன்படுத்தி நீர் வழங்கல் தொகுதிக்கு எவ்வாறு சூடான நீரைப்பெறுவதற்கான ஒழுங்கமைப்பு உருவில் காட்டப்பட்டுள்ளது. சூடான நீர் தாங்கி பிரதான தாங்கிக்குக் கீழே இருக்கத்தக்கதாக பொருத்தப்பட்டிருப்பதுடன் சூரிய வலு உறிஞ்சல் தகடுகள் கூரையின் மேல் பொருத்தப்பட்டுள்ளன . முதலில் குளிரான நீர் பிரதான நீர்த்தாங்கியிருந்து சூடான நீர் தாங்கிக்கு வரும்போது மெல்லிய குழாய்களினால் சூரிய சக்தி உறிஞ்சப்படுகிறன.காட்டப்பட்ட உருவானது எவ்வாறு சூடான நீர் உட்புகுகின்றது என்பதை காட்டுகிறது. இச்செயற்பாடு தாங்கியிலுள்ள நீர் முழுவதும் ஒரே வெப்பநிலைக்கு சமனாக வரும் வரை திரும்பத்திரும்ப நிகழும் . பயன்பாடு காரணமாக குறைவடைந்த நீரானது பிரதான தாங்கியினுள் மீள நிரப்பப்படும்.





(i) கூரையின் மேல் உள்ள குழாய் தொகுதி நீளமானதாகவும் மெல்லியதாகவும் இருப்பதற்கான காரணம் யாது?

c) சூரிய மாறிலி என்பது சூரிய வலு பூமிக்குக் கடத்தப்படும் வெப்பச்செறிவு ஆகும். சூரியனிலிருந்து கடத்தப்படும் வலுவில் 45% வெப்பமாகவும் , 47% ஒளியாகவும் மிகுதி UV கதிர்களாகவும் கடத்தப்படுகின்றது. சூரிய மாறிலியானது $1500W\ m^{-1}$ ஆகும்.

i. பூமியில் படும் வெப்பக்கதிர்ப்பின் செறிவைக் காண்க?

ii. மெல்லிய குழாய்த்தொகுதியின் வெப்பம் உறிஞ்சும் விளையுள் நிகரப்பரப்பளவு $2m^2$ ஆகவும் மெல்லிய குழாய்த்தொகுதியின் வினைத்திறன் 80% ஆக இருப்பின் 1s இல் தொகுதியினால் உறிஞ்சப்படும் வெப்பத்தைக் காண்க.

iii. நாள் ஒன்றில் அறைவெப்பநிலை 30^0C இல் பிரதான தாங்கியில் $100l$ கனவளவுடைய நீர் நிரப்பப்பட்டு மூடப்படுகிறது. தாங்கியிலுள்ள நீரின் வெப்பநிலை 80^0C ஆக எடுக்கும் நேரத்தைக் கணிக்க.

iv. 80^0C இல் உள்ள தாங்கியிலுள்ள நீரின் கனவளவு யாது?

v. 80^0C இல் நீரினால் தாங்கி முற்றாக நிரம்பியுள்ளதாயின் 30^0C இல் தாங்கியின் கனவளவு யாது? தாங்கி ஆக்கப்பட்ட பதார்த்தத்தின் ஏகபரிமாண விரிகைத்திறன் $3.3x10^{5}\ {}^0C^{-1}$ ஆகும்.

vi. 30^0C இல் நீரின் அடர்த்தி $1000kg\ m^{-3}$ ஆயின் 80^0C இல் நீரின் அடர்த்தி யாது?

vii. வெப்பமாக்கப்பட்ட நீரானது மெல்லிய குழாய்த்தொகுதியினூடாக எவ்வாறு திரும்ப தாங்கியை நிரப்புகின்றது என்பதை விளக்குக?

viii. குளியல் தேவைக்காக நீரின் வெப்பநிலை 35^0C ஆகும். இதைப் பெறுவதற்காக தாங்கியிலுள்ள 80^0C உள்ள சுடு நீரும் , 30^0C உள்ள குளிர் நீரும் சேர்க்கப்படுகிறது. கலக்கப்பட்ட நீரின்
 (i) திணிவுகளின் விகிதம்
 (ii) கனவளவுகளின் விகிதம்
 (iii) சேர்க்கப்பட்ட சுடு நீரின் கனவளவு என்பவற்றை காண்க.

ix. மனிதன் ஒருவன் குளியல் தேவைக்காக $30l$ நீரைப் பயன்படுத்துகிறான் . தாங்கியிலுள்ள மிகுதியாக இருக்கும் சுடு நீரின் கனவளவு யாது?

x. குளியலின் பின் வால்வு ஒன்று திறக்கப்பட்டு பிரதான தாங்கியிலிருந்து சுடு நீர்த்தாங்கி நிரப்பப்படுகின்றது.இப்போது இத்தாங்கியிலுள்ள நீரின் வெப்பநிலையைக் கணிக்குக?

xi. இரவில் 6 மணித்தியாலத்திற்கு நீர் பயன்படுத்தப்படுவதில்லை. ஒரு நாளில் 3 மணித்தியால முடிவு வரை 50^0C இல் பேணுவதற்கு பயன்படுத்தப்படவேண்டிய தாங்கி ஆக்கப்பட்ட பதார்த்தத்தின் வெப்பக்கடத்தாறு யாது? நாள் ஒன்றின் அறைவெப்பநிலை 25^0C ஆகும்.

தாங்கியின் நிகர மேற்பரப்பின் அளவு $=2\ m^2$
தாங்கி ஆக்கப்பட்ட பதார்த்தத்தின் தடிப்பு $= 0.5\ cm$
தாங்கி ஆக்கப்பட்ட பதார்த்தத்தின் தன்வெப்பக்கொள்ளளவு புறத்தணிக்கத்தக்கது எனக்கொள்க.

AUSDAV

பகுதி (B)

கருப்பிளவு, கருஒன்றல் ஆகியன அணுத்தாக்கங்களாகும். கரு உலைகளில் கருத்தாக்கத்தின் மூலம் கருச்சக்தியை மின்சக்தியாக மாற்றியமைக்கலாம். யுரேனியம் (U) கருக்களை நியூத்திரன்களால் மோதி அடிப்பதன் மூலம் கருப்பிளவுத்தாக்கம் நிகழ்த்தப்படலாம். இத்தகைய கருப்பிளவுத் தாக்கத்தின் மூலம் மின் சக்தியை உற்பத்தி செய்யும் வெப்பஉலையின் அமைப்புவரிப்படம் கீழே காட்டப்பட்டுள்ளது. வெப்ப உலைகளிலே கட்டுப்படுத்தப்பட்ட சங்கிலித்தாக்கம் நிகழ்கின்றது. இத்தொகுதியில் வெளிவிடப்படும் வெப்பத்தின் மூலம் குளிர்நீரானது சூடாக்கப்பட்டு, பெறப்படும் நீராவி மூலம் தைனமோக்களின் சுழலிகளைச் சுழற்றி மின்சக்தி உற்பத்தியாக்கப்படுகிறது.



(a)

(i)கருப்பிளவுத்தாக்கம் என்றால் என்ன?

(ii)தாக்கத்தொகுதியில் கரு தொடர்பான எந்த சக்தியானது வெப்பமாக வெளிவிடப்படுகின்றது?

(iii)இங்கு நடைபெறும் கருத்தாக்கத்திற்கான சமன்பாடு கீழே தரப்பட்டுள்ளது.

$$^{235}_{92}\boldsymbol{U} + {}^{1}_{0}\boldsymbol{n} \rightarrow {}^{141}_{56}\boldsymbol{Ba} + {}^{92}_{36}\boldsymbol{Kr} + \boldsymbol{x}^{1}_{0}\boldsymbol{n} + \boldsymbol{Energy}$$

1. x இன் பெறுமானத்தைக் காண்க.
2. இதிலிருந்து சங்கிலித்தாக்கம் எனக்கூறப்பட்டதற்கான காரணத்தைக் குறிப்பிடுக.
3. வெப்பஉலைகளிலே இத்தாக்கமானது எவ்வாறு கட்டுப்படுத்தப்படுகின்றது?

(b) கருத்தாக்கங்களிலே இன்னொரு வகையான கருஒன்றல் நிகழ்த்தப்படுகின்றது.அத்தகைய கீழ்வரும் தாக்கத்தைக் கருதுக.

$$^{2}_{1}\boldsymbol{H} + {}^{2}_{1}\boldsymbol{H} \rightarrow {}^{3}_{2}\boldsymbol{He} + {}^{1}_{0}\boldsymbol{n} + \textbf{சக்தி}$$

டியூப்ரியம் ($^{2}_{1}H$) கருவொன்றின் திணிவு 2.015 u, ஹீலியம் ($^{3}_{2}He$) சமதானிக்கருவின் திணிவு 3.017 u, நியூத்திரனின் திணிவு ($^{1}_{0}n$) 1.009 u. இங்கு u என்னும் அணுத்திணிவு அலகானது $^{12}_{6}C$ சமதானி அணுவினது திணிவின் $\frac{1}{12}$ ஆகும். அணுத்திணிவின் அலகின் பருமனை kg இல் கணிக்க. அவகாதிரோ எண்ணிக்கை 6.023×10^{23} (சாடை $1/_{6.023}$=0.17 என்க.)

(i) 1 u திணிவு அழிவினால் விடுவிக்கப்படும் சக்தியை J இல் கணிக்க.

(ii) இத்தகைய கருத்தாக்கமொன்றின் போது வெளிவிடப்படும் சக்தியைக் கணிக்க.

(iii) 2kg திணிவுடைய டியூப்ரியமானது அழிக்கப்படும் போது, பெறப்படக்கூடிய சக்தியைக்கணிக்க. (ஒரு மூல் டியூப்ரியமானது 6×10^{23} அணுக்களைக் கொண்டுள்ளது.)

(iv) கருத்தாக்கமானது செக்கனுக்கு 200 தாக்கங்கள் என்றவாறு கட்டுப்படுத்தப்பட்டிருப்பின் 2kg திணிவுடைய டியூப்ரியத்தைக் கொண்ட உலையானது சக்தியை வழங்கக்கூடிய நேரத்தைக்கணிக்க.

(v) பெறப்படும் வெப்பச்சக்தி விரயமின்றி கொதிநீராவி கொண்டுள்ள சக்தியாக மாற்றப்படுமாயின், 40% திறனுடன், 10 MW இல் மின்வலு நிலையம் தொழிற்படுகின்றதாயின், மணித்தியாளமொன்றில் உலையில் பயன்படுத்தப்படும் டியூப்ரியத்தின் திணிவைக் காண்க.

(vi) இத்தகைய மின்வலு நிலையத்தின் 50kg திணிவுடைய பணியாளி ஒருவரது உடல் 0.05 Gy கதிர்ப்பு ஊட்டைப் பெற்றதாயின், இவரது உடல்ப்பரப்பினூடாக ஊடுகடத்தப்பட்ட கதிர்ப்புச்சக்தியைக் கணிக்க. (1 Gy =1 J kg^{-1})

AUSDAV

AUSDAV